JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 446/2025 | Crime No. | 702/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **Pw.1**-வேலுச்சாமி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பவானி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2024 ஆம் தேதியன்று நான் பவானி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் மாலை 14.30 மணிக்கு, பவானி காவல் நிலைய உதவி ஆய்வாளர் பகவதி அம்மாள் என்பவருக்கு கிடைத்த கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் பவானி காவல் நிலைய தலைமை காவலர் குமார் மற்றும் சரவணன் ஆகியோர்களுடன் நிலையம் விட்டு புறப்பட்டு பவானி, பண்டார அப்பிச்சி கோவில் அருகில் பின்புறம் உள்ள ஆற்றங்கரையோரம் மதியம் 15.00 மணிக்கு கண்காணித்தபோது அங்கு ஒரு நபர் கையில் பையுடன் நின்றிருந்தவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓடை எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது தனது பெயர் முகவரியை சந்திரசேகர் வயது 48, த/பெ.நல்லப்பன், 130 திருவள்ளுவர் வீதி, பவானி ஈரோடு மாவட்டம் என்று கூறினார். அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்த போது அதில் 180 ml அளவுள்ள பிராந்தியுடன் கூடிய Express Brandy பாட்டில்கள் 6 இருந்தது. மேற்படி நபரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபம் கருதி மேற்படி பிராந்தி பாட்டில்களை விற்பனை செய்ய வைத்திருந்ததாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். எனவே எதிரியை உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி கைது செய்வதற்கான காரணத்தை கூறி பகல் 15.15 மணிக்கு கைது செய்தும், அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடனிருந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் மதியம் 15.30 மணிக்கு மேற்படி பிராந்தி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 180 ml அளவு பிடிக்கக்கூடிய பிராந்தியுடன் கூடிய Express Brandy பாட்டில்கள் 6 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.20 06:08:55 +0530

பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் பவானி நிலையம் வந்து பவானி காவல் நிலைய குற்ற எண்.702/2024 சட்டப்பிரிவு 4(1)(a) TNP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, பவானி அவர்களுக்கு அனுப்பி வைத்தும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட நான் எதிரியை தக்க நிலைப்பணியில் விடுவித்தேன். பின்னர் வழக்கு கோப்பை பவானி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.பகவதி அம்மாள் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் ரோந்து பணிக்கு தனித்தனி வாகனத்தில் தான் சென்றோம் என்றால், சரியல்ல, சம்பவயிடத்திற்கு செல்லும்போது உபகரணங்கள் எடுத்துச் சென்றேன் என்றால், சரிதான். என்னென்ன உபகரணங்கள் எடுத்துச் சென்றோம் என்றால், மடிக்கணினி போன்றவை எடுத்துச் சென்றோம். எதிரி மது பாட்டில்கள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எதிரி மது பாட்டில்களை யாருக்கு எவ்வளவு தொகைக்கு விற்றார் என்கின்ற எந்த விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

ஒரு தனி நபர் எத்தனை லிட்டர் மது பாட்டில் வைத்துக் கொள்ளலாம் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். சுமார் 1– 1/2 லிட்டர் வைத்துக் கொள்ளலாம். சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டது என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ரோந்து பணிக்கு எதுவும் செல்லவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by

him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.20 06:09:05 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani